## திராவிட நாயகன் — அண்ணன்

# முதல்வரின் உரிமைக் கேள்விகளால், அமித் ஷா வரை பதற்றம்!

## கழக மகளிரணி சார்பில் நடைபெற்ற தலைவர் பிறந்தநாள் விழாவில் — கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**சென்னை, மார்ச் 3 -**

**கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு, கழக மகளிரணி சார்பில் சென்னையில் ஒருங்கிணைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு நலத்திட்டங்களை வழங்கினார் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி.**




அப்போது விழாவில் அவர் ஆற்றிய உரை வருமாறு–

“தலைவர் கலைஞர் எந்த அளவுக்கு மாற்றுத் திறனாளிகள் மீது, இந்த சமூகத்தின் விளிம்பு நிலை மக்கள் மீது கவனம் செலுத்தினார் என்பதை எம்.பி. தமிழச்சி தங்கப்பாண்டியன் குறிப்பிட்டுச் சொன்னார்.

ஒரு அரசியல் கட்சி என்றால் அதன் திட்டங்கள் பெரும்பாலும் வாக்கு வங்கி அரசியலை நோக்கியே இருக்கும். ஆனால் தலைவர் கலைஞரின் திட்டங்கள் அரசியல் நோக்கம் மட்டுமே கொண்டதில்லை.

இந்த சமூகத்திலே பெரும் வாக்கு வங்கியாக இல்லாத மாற்றுத் திறனாளிகளாக இருக்கட்டும், மூன்றாம் பாலினம் என்று சொல்லக் கூடிய அந்த சகோதர சகோதரிகளாக இருக்கட்டும், அவர்களையும் இந்த சமுதாயம் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஆட்சிக் கட்டிலிலே இருந்து அவர்களுக்கு ஒரு கொடையாளியாக உதவிகள் செய்வேன் என்ற அந்த எண்ணம் கூட இல்லாமல், அந்தத் துறைகளை தன் கையில் வைத்துக் கொண்டு அவர்களுக்கு உதவிகள் செய்வதைத் தாண்டி உரிமைகள் தந்தவர் முதலமைச்சர் தலைவர் கலைஞர்.

**தலைவர் கலைஞர் ஆட்சியின் நீட்சி!**

அவருடைய வழியில் இன்று முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எல்லா வகையிலும் தலைவர் கலைஞரின் ஆட்சியின் நீட்சியாக இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் திராவிட நாயகன் தான் தளபதி அவர்கள்.

தலைவர் கலைஞர் எந்த காலத்திலும் எந்த நிலையிலும் தமிழின், தமிழ்நாட்டின், தமிழர்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்காத தலைவர். அதே வழியில் இன்று முதலமைச்சர் அண்ணன் தளபதி தனது பிறந்தநாள் செய்தியைக் கூட மொழியுரிமை, மாநில உரிமை நோக்கித்தான் முன் வைத்திருக்கிறார்.

**பா.ஜ.க. பதறுகிறது!**

ஒன்றே ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். எத்தனையோ எதிர்க்கட்சிகள், எத்தனையோ தலைவர்கள் ஒன்றியத்தில் இருக்கும் பா.ஜ.க. ஆட்சியை எதிர்க்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், நமது தலைவர் ஒரு கருத்தை எடுத்து வைக்கும் போது பி.ஜே.பி. மொத்தமாக பதறுகிறது என்பதை கவனிக்கவேண்டும். தமிழ்நாடு பி.ஜே.பி. முதல் இங்கே வந்த உள்துறை அமித் ஷா வரை அந்த பதற்றத்தை நாம் தெளிவாக பார்க்க முடிகிறது.

தேர்தலுக்காக இதையெல்லாம் நாம் பேசுவதாக அவர்கள் பேசுகிறார்கள். தேசிய அளவில் தேர்தல் நடந்து முடிந்து, இன்று ஒன்றிய ஆட்சி பா.ஜ.க. கையில் இருக்கிறது. வரக் கூடிய தேர்தல் தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான தேர்தல். நான் கேட்கிறேன். நாடு முழுதும் நீங்கள் வெற்றி பெற்றீர்கள். இன்று ஆட்சியில் இருக்கிறீர்கள். அதை மறுப்பதற்கில்லை. ஆனால் தமிழ்நாட்டில் எத்தனை இடத்தில் வெற்றி பெற்றீர்கள்? தேசிய அளவிலான தேர்தலிலேயே நீங்கள் தமிழ்நாட்டில் ஒரு இடம் கூட வெற்றி பெறவில்லை.

வரக் கூடிய தேர்தல் சட்டமன்றத் தேர்தல். இதில் நீங்கள் எங்களுக்கு பொருட்டே இல்லை. உங்களை எதிர்த்து அரசியலை செய்ய வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. எங்கள் தலைவர் கலைஞரின் மகன். இல்லாத எதிரியை உருவாக்கி அவர்களை உட்கார வைத்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை.

**எதிரிகள் இல்லாத களம்!**

தேர்தல் நேரத்திலே எதைப் பேச வேண்டும், எந்த பிரச்சினைகளை பேச வேண்டும், தேர்தலில் எங்களுக்கு யார் எதிரி என்பதெல்லாம் எங்களுக்குத் தெளிவாக தெரியும்.

ஆனால் முதலமைச்சருக்கு யார் எதிரி என இன்று தெரியவே இல்லை. மேடையில் நின்று பார்த்தால், முதலமைச்சருக்கு எதிரிகள் இருக்கிறார்களா என்று தெரிய முடியாத அளவுக்கு ஒரு களம் உருவாகியிருக்கிறது.

**பா.ஜ.க.வை எதிரியாக நினைத்து அரசியல் செய்ய வேண்டியதில்லை!**

இப்படிப்பட்ட சூழலிலே இல்லாத பி.ஜே.பி.யை எதிரியாக நினைத்துக் கொண்டு தகவமைத்து, அவர்களுக்கு எதிராக நாங்கள் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் கேட்பது, எங்களது மாணவர்களுக்கான, எங்களது தமிழ்நாட்டுக்கான உரிமைகளை. முதலமைச்சர் கையிலெடுத்திருப்பது தமிழ்நாட்டை காப்பதற்கான உறுதி மொழி. இதை வைத்து பி.ஜே.பி.க்கு எதிராக அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் தமிழ்நாட்டு அரசியல் களத்தில் நீங்கள் இல்லவே இல்லை.

எதற்காக இப்போது திடீரென்று மும்மொழிக் கொள்கையை, இந்தித் திணிப்பை எதிர்க்கிறீர்கள் என்று சிலர் கேட்கிறார்கள். நாம் இதுபற்றி பேசவில்லை., முதலமைச்சர் இதுபற்றி முடிவெடுத்து பேசவில்லை. தமிழ்நாடு அரசுக்கு வரவேண்டிய கல்வி நிதியை தராமல் ஒன்றிய அரசாங்கம் தன் கையில் வைத்துக் கொண்டு, நீங்கள் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் நிதியைன் தருவேன் என்று சொல்வது மிரட்டலா இல்லையா? அந்த மிரட்டலை, மானமும், சுயமரியாதையும் உள்ள தமிழனோ தமிழச்சியோ ஏற்றுக் கொள்ள முடியுமா? அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் செய்கிறார்கள்.

என் மாநிலத்தில் இருக்கும் மக்கள் எந்த மொழியை படிக்க வேண்டும் என்பதை நீ நிர்ணயம் செய்யாதே. எத்தனை மொழி படிக்க வேண்டும் என்று நீ நிர்ணயம் செய்யாதே. இங்கே இருக்கும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எத்தனை பேருக்கு இந்தி தெரியும். தெரியாது. அங்கே பணியாற்றுகிறோம், அங்கே இருப்பவர்களோடு பழகுகிறோம். இந்தி தெரியாததால் எந்த பிரச்சினையும் இல்லை.

**இந்தியை தெரிந்து கொள்வதால் எந்த லாபமும் இல்லை!**

இங்கே பக்கத்தில் அமர்ந்திருந்த அமைச்சர், அவரது பிள்ளை லண்டன் சென்று ஒரு வருடம் எல்.எல்.பி. கோர்ஸ் படிப்பதாக பெருமையோடு கூறினார். அவரும் இந்தி தெரியாமல்தான் போயிருக்கிறார்.

நமது முதலமைச்சர் அவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனராக பாலகிருஷ்ணன் அவர்களை நியமித்துள்ளார். அவர் இதற்கு முன் ஒரிசாவில் அரசின் ஆலோசகராக பணியாற்றியுள்ளார். தேர்தல் கமிஷனராக பல மாநிலங்களில் பணியாற்றியுள்ளார். அவருக்கு சுத்தமாக இந்தி தெரியாது... என்ன நஷ்டம்?

இன்று தமிழர்களின் உலகின் பல இடங்களில் மருத்துவர்களாக, பொறியாளர்களாக சிறப்பாக பணி செய்கிறார்கள். அவர்களில் எத்தனை பேருக்கு இந்தி தெரியும்? இந்தி தெரிந்து கொள்வதால் இங்கே புதிய லாபம் எதுவும் இல்லை. தேவையானால் இந்தியை கற்றுக் கொள்வோம்.

நிறைய பிள்ளைகள் படித்து முடித்துவிட்டு கொரிய நாடகம் பார்க்க வேண்டும் என்பதற்காக கொரிய மொழி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் ஒருவர் எத்தனை மொழி கற்றுக் கொள்ள வேண்டும், மூன்றாவதாக எந்த மொழியை கற்க வேண்டும் என்பதெல்லாம் தனிப்பட்ட முறையிலே எடுக்க வேண்டிய முடிவு. மூன்று மொழி படிக்க வேண்டும், மூன்றாவது மொழியாக இந்தி படிக்க வேண்டும், அதுதான் பெருமை என்று திணிக்கும்போதுதான். இந்தி படிக்கவில்லையென்றால் நிதி தர மாட்டோம் என்று சொல்லும்போதுதான் முதலமைச்சர் கொதித்தெழுகிறார்.

**தொகுதி வரையறை பா.ஜ.க. பதறுவது ஏன்?**

அதேபோல தொகுதி வரையறை பற்றி முதலமைச்சர் பேசினால், பி.ஜே.பி. பதறுகிறார்கள். இன்னும் நடக்கவே இல்லை அதைப் பற்றி பேசுகிறீர்களே என்று கேட்கிறார்கள். நடந்துவிட்டால் அதுபற்றி பேச முடியுமா? இவ்வளவு நாள் பேசாமல் ஏன் இருந்தீர்கள் என்று அப்போது கேட்பார்கள்.

ஆனால் தொகுதி மறுசீரமைப்பு நடைபெறும் என்பதை சமீபத்தில் பேசிய அமித் ஷா கூட மறுக்கவில்லை. அதற்கு முன்பே நாடாளுமன்றத்தில் தொகுதி சீரமைப்பு பற்றிய கேள்விக்கு, நடைபெறும் என்று தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா கொண்டு வரப்பட்ட போது, தொகுதி சீரமைப்புக்குப் பிறகு தான் இது நடைமுறைக்கு வரும் என்றும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தொகுதி சீரமைப்பு நடைபெறப் போகிறது. அது மக்கள் தொகை அடிப்படையில் நடைபெற்றால் நாங்கள் மிகப்பெரிய இழப்புக்கு ஆளாவோம் என்றுதான் அப்போதில் இருந்தே சொல்லி வருகிறோம்.

இப்போது 39 எம்.பி.க்கள் இருக்கி றோம், அது 31ஆகும். அதன் பின் இன்னும் குறையும். நமக்கு மட்டுமல்ல கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக் கும் இதே நிலைதான். ஆனால் தேர்தல் பிரச்சாரத்துக்கு கூட நம் மாநிலத்துக்கெல்லாம் வர மாட்டார்கள். நாம் சொல்லும் எதுவும் அவர்கள் காதில் ஏறாது,

தமிழ்நாட்டில் 39, புதுச்சேரி 1 என 40 எம்.பிக்கள் என இவர்களின் ஆதரவு இருந்தால் தான் நாம் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை இருந்தால் மட்டுமே, நாம் சொல்வதற்கு மரியாதை இருக்கும். அது இல்லவே இல்லை என்றால், நம் உரிமைகளை எப்படி கேட்க முடியும்? இவ்வளவு இருந்தே நம்மை மிரட்டிப் பார்க்கி றார்கள் என்றால், தொகுதிகள் குறைந்தால் நமது நிலை என்ன?

**கல்வி மீது கவனம் செலுத்திய கலைஞர்!**

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்து வதில் தமிழ்நாடு சிறப்பாக செயல் பட்டது. தலைவர் கலைஞர் காலத்தில் கல்வி மீது அதிக கவனம் செலுத்தினார். சுகாதாரத்தில் அதிக கவனம் செலுத்தி னார். தமிழ்நாட்டின் ஹெல்த் இண்டிகேட்டர்ஸ் வளர்ந்த நாடுகளை விட அதிகமாக இருக்கிறது. அதனால்தான் மக்கள் தொகை கட்டுப்பாடாக உள்ளது. இது அரசாங்கம் மிகச் சிறப்பாக செயல்பட்டதால் உருவான ஒன்று.

ஆனால் நல்லா படித்தபையனை கிளாஸ் ரூமை விட்டு வெளியே நில் என்று சொல்வது மாதிரி. நாமே பாதிப்பது மாதிரி தொகுதி சீரமைப்பில் ஏதும் நடந்துவிடக் கூடாது என்றுதான் நாம் போராடுகிறோம்.

**அமித்ஷா தெளிவுபடுத்தவில்லை!**

ஆனால் அமித் ஷா என்ன சொன்னார்? உங்களுக்கு தொகுதிகள் குறையாது என்று சொன்னார். உபி, ராஜஸ்தான், பீகாருக்கு அதிகப்படுத்த மாட்டோம் என்று சொல்லவில்லை. தெளிவுபடுத்த வில்லை.

இதைத்தான் திராவிட நாயகன், தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் கலைஞரின் மகன் அண்ணன் தளபதி கேள்வி கேட்கிறார். அவரது கேள்விக்கு நேர்மையாக பதில் சொல்லாமல் திசை திருப்புகிறார்கள்.

இந்த கேள்விகளுக்குப் பின்னால் இருக்கும் நேர்மையை நியாயத்தைப் புரிந்துகொள்ளுங்கள். இதைத்தான் தமது பிறந்தநாள் செய்தியாக முதலமைச்சர் விடுத்திருக்கிறார்.

முதலமைச்சர் தலைவர் அண்ணன் அவர்களின் பிறந்தநாள் உறுதி மொழியை நாம் எடுத்துக் கொள்வோம்.

‘தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத் தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபடுவோம், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும். இதுதான் ஒரே இலக்கு’ இதுதான் நமது உறுதிமொழி இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பி னர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜய குமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாநில மகளிர் அணி நிர்வாகி கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

## நாகையில் மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அறிவாலயம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

*நாகை, மார்ச் 3 -*

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இன்று நாகை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இன்று (3ம் தேதி) காலை 9.00 மணிக்கு நாகை புத்தூர் ஆர்ச் அருகே கலைஞர் அரங்கில் நடைபெறும் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் மகன்ஜி.மகிபாலன் எஸ். உமாமகேஸ்வரி திருமணத்தை தலைமை தாங்கி நடத்தி வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள நாகை ஐ.டி.ஐ. மைதானத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

பின்னர் நாகை பால் பண்ணைச்சேரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தையும், தளபதி அறிவாலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவ சிலையையும் திறந்து வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து புதிதாக கட்டப்பட்டுள்ள தளபதி அறிவாலயத்தில் நாகை மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரை யாற்றுகிறார்.

விழாக்களில் அமைச்சர் பெருமக்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலளார்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

---

# நீலகிரி மாவட்ட தி.மு.கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அறிவிப்பு!

*உதகை, மார்ச் 3 -*



நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜூ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு.க. கூட்டம் 5.3.2025 புதன்கிழமை காலை 11.30 மணி அளவில் மாவட்ட கழக அவைதலைவர் .கே. போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர்,அரசு தலைமை கொறடா கா. ராமசந்திரன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் தென்றல் செல்வராஜ் (உதகை) ஆர்.பி.பரமேஸ் குமார் (கூடலூர்), அ.திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, நீலகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து சிறப்புரை யாற்றுகிறார்கள்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர்க் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்:

கழக தலைவர் - தமிழக முதல்வர் தளபதி அவர்களின் 72வது பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள்.

2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள்

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நாமக்கல் மேற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி முதல்வர் பிறந்தநாளை சிறப்புடன் கொண்டாட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து சிறப்புரையாற்றினார். இதில் கே.ஆர்.என்.இ.ராஜேஸ்குமார் எம்.பி. மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருச்சி தெற்கு மாவட்டம், மருங்காபுரி மத்திய ஒன்றியத்தில் கழகத் தலைவர்,தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் விதமாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி ஒன்றியச் செயலாளர் பழனியாண்டி முன்னிலையில் கழக மாநில இலக்கிய அணி புரவலரும்,திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 43வது மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் ந.செந்தில் கழக இரு வண்ண கொடியினை ஏற்றி, தமிழ்நாடு, போராடும், தமிழ்நாடு வெல்லும், என்ற உறுதிமொழியை ஏற்றனர். உடன் கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.